1201. உள்ளாட்சித் தேர்தல்களை இந்த அமைப்பு நடத்துகின்றது?
A) மத்திய தேர்தல் ஆணையம்
B) மாநில தேர்தல் ஆணையம்
C) மாவட்டத் தேர்தல் வாரியம்
D) பார்வையாளர்கள்
*(Gr.IV (Special Test) - SAMU - 2011)*

1202. இராஜ்யசபாவின் தலைவர்
A) குடியரசுத் தலைவர்
B) துணை குடியரசுத் தலைவர்
C) சபாநாயகர்
D) பிரதம அமைச்சர்
*(Gr.IV (Special Test) - SAMU - 2011)*

1203. தமிழ்நாடு மனித உரிமைகள் ஆணையத்தின் தலைமையகம் எங்குள்ளது?
A) திருச்சி B) மதுரை
C) சென்னை D) திருப்பூர்
*(Gr.IV (Special Test) - SAMU - 2011)*

1204. இந்தியாவின் இணைப்பு மொழி
A) பிரெஞ்சு B) ஜப்பானிய மொழி
C) கிரேக்க மொழி D) ஆங்கிலம்
*(Gr.IV (Special Test) - SAMU - 2011)*

1205. இந்தியாவில் முதலாம் ஐந்தாண்டுத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட ஆண்டு
A) 1947 B) 1951
C) 1956 D) 1961
*(Gr.IV (Special Test) - SAMU - 2011)*

1206. புதிய கல்விக் கொள்கை அறிமுகப்படுத்தப் பட்ட ஆண்டு
A) 1980 B) 1985
C) 1986 D) 1983
*(Gr.IV (Special Test) - SAMU - 2011)*

1207. சுதந்திர இந்தியாவின் முதல் இந்தியத் தலைமை ஆளுநர்
A) காந்திஜி B) நேரு
C) ஜின்னா D) இராஜாஜி
*(Gr.IV (Special Test) - SAMU - 2011)*

1208. வாக்காளர் அடையாள அட்டையினை வழங்குவது யார்?
A) இந்திய தேர்தல் ஆணையம்
B) மாவட்ட ஆட்சியர்
C) மாநகராட்சி ஆணையர்
D) தலைவர்
*(Gr.IV (Special Test) - SAMU - 2011)*

1209. இந்திய தேசிய அடையாள அட்டையில் உள்ள இலக்கங்களின் எண்ணிக்கை
A) 12 B) 10
C) 13 D) 11
*(Gr.IV (Special Test) - SAMU - 2011)*

1210. இந்தியத் தேர்தல் ஆணையம் அமைந்துள்ள இடம்
A) மும்பை B) சென்னை
C) புதுதில்லி D) கொல்கத்தா
*(Gr.IV (Special Test) - SAMU - 2011)*

1211. சதி ஒழிக்கப்பட்ட ஆண்டு
A) 1828 B) 1829
C) 1835 D) 1838
*(Gr.IV (Special Test) - SAMU - 2011)*

1212. சமுதாயத்தின் அடிப்படை அங்கம்
A) குடும்பம் B) இல்லம்
C) கிராமம் D) மாநகரம்
*(Gr.IV (Special Test) - SAMU - 2011)*

1213. இந்தியாவில் வாக்களிக்கும் உரிமைக்கான வயது
A) 21 ஆண்டுகள் B) 25 ஆண்டுகள்
C) 18 ஆண்டுகள் D) 20 ஆண்டுகள்
*(Gr.IV (Special Test) - SAMU - 2011)*

1214. ஊராட்சி தேர்தல்களில் அரசியல் கட்சிகள் பங்கேற்க வேண்டியது மிக அவசியம் என்பதை சிபாரிசு செய்தது :
A) அசோக்மேத்தா குழு
B) பல்வந்த் ராய் மேத்தாகுழு
C) இராஜீவ் காந்தியின் பரிந்துரை
D) நரசிம்மராவின் பரிந்துரை
*(Group - I A - THOL - 2011)*

1201 ....B 1202.... B 1203..... C 1204..... D 1205 .... B 1206..... C 1207..... D 1208...... A 1209.... A 1210 .... C
1211 ....B 1212.... A 1213..... C 1214..... A

1215. நரசிம்மம் குழு எந்த ஆண்டு ஆரம்பிக்கப் பட்டது?

A) *1991* B) *1981*
C) *1982* D) *1983*

***(Group – I A – THOL - 2011)***

1216. இந்தியாவின் மத்திய தேர்தல் ஆணையம் எந்த வருடம் பல நபர் கொண்ட தேர்தல் ஆணையமானது?

A) *1985* B) *1988*
C) *1989* D) *1990*

***(Group – I A – THOL - 2011)***

1217. தமிழ்நாடு மாநில மனித உரிமை ஆணையம் ஏற்படுத்தப்பட்ட ஆண்டு

A) *1998* B) *1996*
C) *1997* D) *2000*

***(Group – I A – THOL - 2011)***

1218. மத்தியில் கூட்டாட்சி முறையைக் கொண்டு வந்த சட்டம் எது?

A) *1909* ஆம் ஆண்டுச் சட்டம்
B) *1919* ஆம் ஆண்டுச் சட்டம்
C) *1935* ஆம் ஆண்டுச் சட்டம்
D) *1950* ஆம் ஆண்டுச் சட்டம்

***(Group – I A – THOL - 2011)***

1219. எந்த அரசியலமைப்பு சட்டத் திருத்தம் கல்வியை அடிப்படை உரிமையாக்கியது?

A) 96வது திருத்தம் B) 86வது திருத்தம்
C) 84வது திருத்தம் D) 68வது திருத்தம்

***(Group – I A – THOL - 2011)***

1220. அரசியலமைப்பு சீர்திருத்தம் குறித்து வெள்ளை அறிக்கை வெளியிடப்பட்ட ஆண்டு

A) *1920* B) *1930*
C) *1933* D) *1935*

***(Group – I A – THOL - 2011)***

1221. "நகர் பாலிக் சட்டம்" என அறியப்படும் சட்டத்திருத்தம் எது?

A) 72 வது சட்டத்திருத்தம்
B) 73 வது சட்டத்திருத்தம்
C) 74 வது சட்டத்திருத்தம்
D) இவற்றுள் எதுவுமில்லை

***(Group – I A – THOL - 2011)***

1222. கீழ்க்கண்டவற்றுள் 'நேரடி நடவடிக்கை நாள்' என்று அறிவிக்கப்பட்டது எது?

A) டிசம்பர் *22, 1939* B) ஆகஸ்ட் *16, 1946*
C) மே *16, 1946* D) ஆகஸ்ட் *15, 1947*

***(Group – I A – THOL - 2011)***

1223. இந்திய அரசியலமைப்பில் எந்த ஷரத்து குடியுரிமைச் சட்டம் 1955 ஐ விவரிக்கிறது?

A) ஷரத்து *11* B) ஷரத்து *12*
C) ஷரத்து *13* D) ஷரத்து *14*

***(Group – I A – THOL - 2011)***

1224. இந்தியாவின் முதல் நிதி அமைச்சர் யார்?

A) T.T. கிருஷ்ணமாச்சாரி
B) Y.V. ரெட்டி
C) சண்முகம் செட்டியார்
D) C. சுப்பிரமணியம்

***(Group – I A – THOL - 2011)***

1225. ஆம்-ஆத்மி பீமா யோஜனா கீழ்க்கண்ட எந்த வகை சார்ந்த சமூகப் பாதுகாப்பை அளிக்கிறது?

A) அனைத்து ஊரகத் தொழிற்பகுதித் தொழிலாளர்களுக்கும்
B) ஊரகப் பகுதியில் வறுமைக் கோட்டின் கீழ்வரும் அனைத்து நிலமற்ற தொழிலாளர்களுக்கும்
C) நகரப் பகுதியில் வாழும் அனைத்து தொழிலாளர்களுக்கும்
D) ஊரக மற்றும் நகர்ப்புற தொழிலாளர்கள் அனைவருக்கும்

***(Group – I A – THOL - 2011)***

1226. தொழிற்சாலை உரிமம் குறித்த புதிய கொள்கைகள் அறிவிக்கப்பட்ட ஆண்டு

A) மார்ச் *1980* B) பிப்ரவரி *1970*
C) ஏப்ரல் *1971* D) மே *1972*

***(Group – I A – THOL - 2011)***

1227. உயர்நீதிமன்ற நீதிபதி .............. முடியும் வரை பதவி வகிப்பார்

A) 58 வயது B) 60 வயது
C) 62 வயது D) 65 வயது

***(Group – I A – THOL - 2011)***

1215 ....A 1216.... D 1217..... B 1218..... C 1219 .... B 1220..... C 1221 ..... C 1222...... B 1223.... A 1224 .... C
1225 ....B 1226.... B 1227..... C

**1228.** தகவல் கேட்டு பெறும் உரிமைச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட ஆண்டு

A) 2003 B) 2004

C) 2005 D) 2008

*(Group – I A – THOL - 2011)*

**1229.** தமிழக சட்டசபையின் உறுப்பினர்களின் எண்ணிக்கை

A) 117 B) 234

C) 78 D) 45

*(Group – I A – THOL - 2011)*

**1230.** கீழே கூறப்பட்டுள்ளவற்றில் இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் எந்த பிரிவு பாராளுமன்றம் புதியதாக அகில இந்திய அரசுப்பணியை உருவாக்க வகை செய்கிறது?

A) பிரிவு 303 B) பிரிவு 307

C) பிரிவு 309 D) பிரிவு 312

*(Group – II – WAKA - 2011)*

**1231.** பின்வருவனவற்றுள் குடியுரிமை தொடர்பான திருத்தச்சட்டம் இயற்றப்படாத ஆண்டு?

A) 1955 B) 1976

C) 1986 D) 1992

*(Group – II – WAKA - 2011)*

**1232.** 1979-ம் ஆண்டே கட்சி தாவல் தடை சட்டத்தை இயற்றிய மாநிலம்

A) கேரளா B) ஜம்மு & காஷ்மீர்

C) மேற்கு வங்காளம் D) தமிழ்நாடு

*(Group – II – WAKA - 2011)*

**1233.** மாநில சட்ட மேலவையின் மொத்த உறுப்பினர்களில், எத்தனை பேரை ஆளுநர் நியமனம் செய்யலாம்?

A) $\frac{1}{4}$ B) $\frac{1}{6}$

C) $\frac{1}{8}$ D) $\frac{1}{5}$

*(Group – II – WAKA - 2011)*

**1234.** கீழே உள்ளவைகளில் எது இந்திய அரசியல் சட்டத்தின் சிறப்பு அம்சங்களாக கூறப்படுகின்றது?

A) தலைவர்/அதிபர் முறை அரசு, ஒற்றையாட்சி மற்றும் இருகட்சி முறை

B) பாராளுமன்ற, ஒற்றையாட்சி மற்றும் இருகட்சி முறை

C) பாராளுமன்ற, கூட்டாட்சி மற்றும் பலகட்சி முறை

D) பாராளுமன்ற, ஒற்றையாட்சி மற்றும் பலகட்சி முறை

*(Group – II – WAKA - 2011)*

**1235.** இந்திய பாராளுமன்ற நடைமுறையில் பூஜ்ய நேரம் அறிமுகப்படுத்தப்பட்ட ஆண்டு

A) 1945 B) 1950

C) 1962 D) 1976

*(Group – II – WAKA - 2011)*

**1236.** கோவா இந்திய குடியரசில் இணைக்கப்பட்ட வருடம் எது?

A) 1956 B) 1959

C) 1961 D) 1962

*(Group – II – WAKA - 2011)*

**1237.** தமிழ்நாட்டில் ஜமீன்தாரி முறை எப்போது ஒழிக்கப்பட்டது?

A) 1947 B) 1948

C) 1950 D) 1952

*(Group – II – WAKA - 2011)*

**1238.** தேசிய இடைக்கால அரசு ஏற்பட்டது எப்போது?

A) 1946 B) 1948

C) 1950 D) 1952

*(Group – II – WAKA - 2011)*

**1239.** இந்திய அரசியலமைப்பின் எந்த பிரிவு (Art) கிராம பஞ்சாயத்துக்களை அமைத்துக் கொள்ள வகை செய்துள்ளது.

A) பிரிவு 15 B) பிரிவு 25

C) பிரிவு 243 D) பிரிவு 42

*(Gr.I) – IDPC - 2011)*

**1240.** மத்திய அரசு கொடுக்கும் நிதியுதவியின் நோக்கம்

A) மாநிலங்களின் நிதிவளத்தினைப் பெருக்க

B) மத்திய-மாநில பரஸ்பர உறவுமுறையை நிலைநாட்ட

C) நிலையான அரசு மத்தியில் செயல்பட

D) இவை அனைத்தும்

*(Gr.I) – IDPC - 2011)*

1228 ....C 1229.... B 1230.....D 1231..... B 1232 .... C 1233..... B 1234..... C 1235...... C 1236.... D 1237 ....B
1238 ....A 1239.... C 1240.....D

1241. தமிழகத்தில் உள்ளாட்சி அமைப்புகளில் பெண்களுக்கு இட ஒதுக்கீடு வழங்கப்பட்டது எந்த ஆண்டு?

A) 1991 B) 1951
C) 1994 D) 2010

(Gr.I) - IDPC - 2011)

1242. 73வது அரசியலமைப்பு திருத்தச்சட்டம் இவரது காலத்தில் நிறைவேற்றப்பட்டது.

A) இராஜீவ் காந்தி B) A.B. வாஜ்பாய்
C) வி.பி.சிங் D) நரசிம்மராவ்

(Gr.I) - IDPC - 2011)

1243. இது எல்லாவிதத்திலும் அனைவருக்கும் சமய சுதந்திர உரிமையைக் கொடுக்கிறது?

A) சரத்து 25 முதல் 28 வரை
B) சரத்து 29
C) சரத்து 30
D) சரத்து 34

(Gr.I) - IDPC - 2011)

1244. இரட்டை அரசாங்க முறை எந்த ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது?

A) 1919 B) 1909
C) 1935 D) 1947

(Gr.I) - IDPC - 2011)

1245. இந்தியாவில் அதிகாரப் பகுப்பில், பொதுப் பட்டியலிலுள்ளவை

A) 47 துறைகள் B) 66 துறைகள்
C) 97 துறைகள் D) 77 துறைகள்

(Gr.I) - IDPC - 2011)

1246. இந்திய ஐக்கியத்தின் .......... மாநிலம் தனக்கே சொந்தமான அரசியலமைப்பை பெற்றுள்ளது

A) பஞ்சாப்
B) அருணாசலப்பிரதேசம்
C) சிக்கிம்
D) ஜம்மு மற்றும் காஷ்மீர்

(Gr.I) - IDPC - 2011)

1247. கீழ்க்கண்ட வாக்கியங்களைக் கவனி :

கூற்று (A) : ஒரு அமைச்சர் மீது நம்பிக்கை யில்லா தீர்மானம் நிறை வேறினால் அனைத்து அமைச்சர்களும் பதவி விலக வேண்டும்.

காரணம்(R) : அந்த அமைச்சர் மட்டும் பதவி விலக வேண்டும்.

கீழே குறிப்பிட்டுள்ள குறியீட்டில் சரியான விடையைத் தேர்ந்தெடு:

A) (A) மற்றும் (R) இரண்டும் சரி, மேலும் (R) என்பது (A) விற்கு சரியான விளக்கம்
B) (A) மற்றும் (R) இரண்டும் சரி, மேலும் (R) என்பது (A) விற்கு சரியான விளக்கமல்ல.
C) (A) சரி, ஆனால் (R) தவறு.
D) (A) தவறு, ஆனால் (R) சரி.

(Gr.I) - IDPC - 2011)

1248. கீழ்க்கண்ட கூற்றுகளை ஆய்க :

I. அரசு நெறிக் கொள்கை அரசியல் அமைப்பின் ஆன்மாவாக கருதப்படுகின்றது.
II. அரசு நெறிக் கொள்கை உரிமைகளை பாதுகாக்கும் கருவியாக உள்ளது.
III. அரசு நெறிக் கொள்கை அரசியல் அமைப்பு பரிகாரங்களுக்கான உறுதுணையாகும்.
IV. அரசு நெறிக் கொள்கை தனி நபர் சொத்து விரிவாக்க சம்பந்தமானது.

இவற்றுள்,

A) I மட்டும் சரியானது
B) II மற்றும் III சரியானவை
C) III மற்றும் IV சரியானவை
D) IV மட்டும் சரியானது

(Gr.I) - IDPC - 2011)

1249. சக சகாப்தத்தின் அடிப்படையில் ...... முதல் தேசிய நாட்காட்டி ஏற்கப்பட்டது.

A) 22 மார்ச், 1950 B) 1 சனவரி, 1950
C) 22 மார்ச், 1957 D) 22 ஆகஸ்டு, 1952

(Gr.I) - IDPC - 2011)

1250. இந்தியாவில் நிதிக்குழுவை நியமிப்பவர் யார்?

A) இந்திய ஜனாதிபதி
B) இந்திய பிரதமர்
C) ராஜ்ய சபையின் தலைவர்
D) லோக்சபையின் சபாநாயகர்

(Gr.I) - IDPC - 2011)

1251. சிறப்பு பொருளாதார மண்டல சட்டம் இந்திய பாராளுமன்றத்தில் ..........ல் இயற்றப்பட்டது.

A) மே, 2005 B) ஏப்ரல், 2004
C) மே, 2008 D) ஏப்ரல், 2007

(Gr.I) - IDPC - 2011)

---

1241 ....C 1242....D 1243.....A 1244.....A 1245 ....A 1246....D 1247.....C 1248......A 1249....C 1250....A 1251....A

1252. கட்சி தாவல் சட்டத்தின் படி தேர்ந்தெடுக்கப் பட்ட ஒரு பாராளுமன்ற உறுப்பினர் எந்த கிழ்க்கண்ட காரணத்தால் தனது உறுப்பினர் பதவியை இழக்க நேரிடும்.

I. தன்னிச்சையாக கட்சி உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்தால்

II. தனது கட்சியின் கட்டளைக்கு விரோதமாக பாராளுமன்றத்தில் ஒட்டு போடும் போது அல்லது போடாமல் இருந்தால்

III. கட்சியில் இருந்து நீக்கப்பட்டால்

IV. தான் ஜெயித்த கட்சியை விட்டுவிட்டுவேறு ஒரு அரசியல் கட்சியில் சேரும் போது

இவற்றுள் :

A) I, II, III மற்றும் IV B) I, II மற்றும் IV
C) I, III மற்றும் IV D) II, III மற்றும் IV

*(Gr.I) – IDPC - 2011)*

1253. இந்திராகாந்தி தலைமையிலான காங்கிரஸ் அரசாங்கம் தேசிய அவசர நிலைப் பிரகடனப் படுத்திய ஆண்டு

A) 1969 B) 1971
C) 1975 D) 1977

*(Gr.I) – IDPC - 2011)*

1254. கிழ்க்கண்டவற்றுள் எந்த ஒன்று இந்திய அரசியலமைப்பின் சிறப்புத் தன்மையன்று?

A) அரசு நெறிக்கொள்கை
B) நெகிழும் அரசியலமைப்பு
C) மதச்சார்பின்மை
D) ஒற்றைக் குடியுரிமை

*(Gr.I) – IDPC - 2011)*

1255. சென்னை அரசு முதல் வகுப்புவாரி அரசு ஆணையை எப்பொழுது வெளியிட்டது?

A) 1920 B) 1921
C) 1922 D) 1927

*(Gr.I) – IDPC - 2011)*

1256. தேசிய மக்கள் தொகை பதிவு சார்ந்தது

A) மக்கள் தொகை கணக்கெடுப்பு சட்டம் 1948 மற்றும் குடிமகன் விதிகள் 2003
B) குடியுரிமை சட்டம் 1955 மற்றும் குடிமகன் விதிகள் 2003
C) மக்கள் தொகை கணக்கெடுப்பு சட்டம் 1948 மற்றும் குடியுரிமை சட்டம் 1955
D) குடிமகன் விதிகள் 2003 மற்றும் ஐ.பி. சட்டம் 1954

*(Gr.I) – IDPC - 2011)*

1257. குழந்தை திருமணத்தை ஒழிக்க சட்டம், ............. ஆண்டில் இயற்றப்பட்டது

A) 1960 B) 1965
C) 1970 D) 1975

*(Gr.I) – IDPC - 2011)*

1258. கிழ்க்கண்ட கூற்றுகளை ஆய்க :

I. இந்தியாவில் அரசு நெறிமுறைக் கோட்பாடு களுக்கு நீதித்துறையின் நேரடி பரிகாரம் ஏதுமில்லை.

II. இந்தியாவில் அரசு நெறிமுறைக் கோட்பாடு களுக்கு நீதித்துறையின் நேரடிப் பரிகாரங்கள் சில உண்டு.

இவற்றுள்,

A) I மட்டும் சரியானது
B) I மற்றும் II சரியானவை
C) II மட்டும் சரியானது
D) இவற்றுள் எதுவுமில்லை

*(Gr.I) – IDPC - 2011)*

1259. ஷரத்து 368ன் படி உச்சநீதிமன்றம் அடிப்படை உரிமைகளை திருத்தம் செய்ய இயலாது என்று எந்த வழக்கில் கூறியுள்ளது?

A) கோபாலன் எதிராக மதராஸ் மாநிலம்
B) கேசவானந் எதிராக கேரளா மாநிலம்
C) கோலக்நாத் எதிராக பஞ்சாப் மாநிலம்
D) மேனகா எதிராக மத்திய அரசு

*(Gr.I) – IDPC - 2011)*

1252 ....B 1253.... B 1254..... B 1255..... B 1256 .... C 1257..... A 1258 ..... A 1259...... C

1260. கீழே கொடுக்கப்பட்டுள்ள நிகழ்வுகளை கால வரிசைப்படி சரியானதைத் தேர்ந்தெடு :

I. புதிய பஞ்சாயத்து முறை அறிமுகம்
II. இராஜீவ்காந்தி படுகொலை
III. சந்திராயன் திட்டம்
IV. துவக்கக் கல்வி அடிப்படை உரிமையாதல்

இவற்றுள் :

A) II, I, III மற்றும் IV B) I, II, IV மற்றும் III
C) I, II, III மற்றும் IV D) III, I, IV மற்றும் II

*(Group – IA – AGGT - 2012)*

1261. கீழ்க்கண்டவர்களில் யார் இந்திய ஜனாதிபதியால் பதவியில் அமர்த்தப்படுவதில்லை?

A) பிரதம மந்திரி B) துணை ஜனாதிபதி
C) முதன்மை நீதிபதி D) கேபினட் அமைச்சர்கள்

*(Group – IA – AGGT - 2012)*

1262. இந்திய தலைமை சட்ட வல்லுநரை நியமனம் செய்பவர்

A) 1924 B) 1925 C) 1926 D) 1937

*(Group – IA – AGGT - 2012)*

1263. இந்திய சாசன முகவுரையின் படி எது/எவை உண்மையானது/வை?

A) நீதிமன்றத்தால்-நிறைவேறப்பட முடியாது
B) இது அரசியல் சாசன சட்டத்தின் பகுதி இல்லை என உச்சநீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது
C) இரண்டு முறை திருத்தப்பட்டது
D) இவை அனைத்தும்

*(Group – IA – AGGT - 2012)*

1264. இரண்டாம் நிர்வாக சீர்திருத்தக்குழுவின் எத்தனை பரிந்துரைகள் ஏற்கப்பட்டது?

A) 1005 B) 105 C) 1051 D) 1251

*(Group – IA – AGGT - 2012)*

1265. இரண்டாம் நிர்வாக சீர்திருத்தக் குழு எத்தனை அறிக்கைகளை சமர்ப்பித்தது?

A) 15 B) 16 C) 22 D) 1251

*(Group – IA – AGGT - 2012)*

1266. இராஜ்ய சபாவின் உறுப்பினர் இல்லாதவர் யார்?

A) திரு. K. ரஹ்மான் கான்
B) திரு. இரவிசங்கர் பிரசாத்
C) திரு. முகம்மது ஹமீது அன்சாரி
D) திரு. K.E. இஸ்மாயில்

*(Group – IA – AGGT - 2012)*

1267. பின்வருவனவற்றை பொருத்துக :

| நீதிப்பேராணை | | அம்சம் |
|---|---|---|
| a) ஆள்கொணர் ஆணை | 1. | நிர்வாக அதிகாரிகளுக்கு எதிராக பிரயோகிக்க இயலாது. |
| b) தடை ஆணை | 2. | அமைச்சர்களுக்கு எதிராக பிரயோகிக்க இயலாது. |
| c) நெறிமுறைஉறுத்தல் | 3. | பிறரும், பாதிப்புக் குள்ளாகாத எந்த சமூக ஆர்வலரும் கோரலாம். |
| d) தகுதிமுறைவினா | 4. | சட்டமன்ற அமைப்புகள் மற்றும்தனிநபர்களுக்கு எதிராக பிரயோகிக்க இயலாது |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| A) | 3 | 1 | 4 | 2 |
| B) | 1 | 2 | 3 | 4 |
| C) | 2 | 3 | 4 | 1 |
| D) | 3 | 4 | 2 | 1 |

*(Group – II – HLT12 - 2012)*

1268. கீழ்க்கண்ட வாக்கியங்களை கவனி.

Dr. பி.ஆர். அம்பேத்கர் கூறியதாவது "அரசு நெறிக் கோட்பாடுகள், இந்திய அரசமைப்பின் சட்டத் திரட்டல் கூறாகும்" ஏனென்றால்,

I. இது நாட்டின் வழிகாட்டியாக அமைந்துள்ளன.
II. மத்திய, மாநில அரசுகள் தம் சட்டங்களையும், கொள்கைகளையும் இயற்றும் போது, இது உதவியாக இருக்கும்.

இவற்றில் எவை சரியானவை?

A) I மட்டும் B) II மட்டும்
C) I மற்றும் II ம் D) I ம் இல்லை IIம் இல்லை

*(Group – II – HLT12 - 2012)*

1269. 1985ம் ஆண்டில் 52வது அரசியலமைப்பு சட்டத் திருத்தம் எதற்காக கொண்டு வரப்பட்டது? சரியான விடையை தேர்ந்தெடுக்கவும்.

A) உயர்நீதிமன்றம் மற்றும் உச்சநீதிமன்ற நீதி பதிகளின் சம்பள உயர்வுக்காக
B) யூனியன் பிரதேசமாக இருந்த 'மிசோரம்' மாநிலமாக மாற்றப்பட்டது
C) கட்சி தாவல் தடை செய்ய
D) பட்டியலில் உள்ள சீர்மரபினருக்கான தேசிய ஆணையம் அமைக்க

*(Group – II – HLT12 - 2012)*

1260 ....A 1261.... B 1262.....D 1263..... B 1264 .... A 1265..... A 1266 ..... C 1267...... A 1268 .... C 1269 .... C

**1270.** கீழ்வருவனவற்றை சரியாக பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| a) | மத்திய-மாநில அரசுகளின் பிரச்சனைகள் | 1. | நீதி மறு ஆய்வு |
| b) | ஒரு சட்டம் அரசியல் சாசனத்திற்கு முரணானது | 2. | முதன்மை ஆதார அதிகாரம் |
| c) | உயர்நீதிமன்றத்திலிருந்து மேல் முறையீடு | 3. | உயர்நீதிமன்றம் |
| d) | ஒருமை ஒருங்கிணைந்த நீதிமன்றம் | 4. | உச்சநீதிமன்றம் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| A) | 2 | 1 | 4 | 3 |
| B) | 1 | 4 | 2 | 3 |
| C) | 3 | 4 | 2 | 1 |
| D) | 1 | 2 | 3 | 4 |

*(Group – II – HLT12 - 2012)*

**1271.** கீழ்க்கண்ட வாக்கியங்களை கவனி :

சரிவிகித பிரதிநிதித்துவ தேர்தல் முறையின் நோக்கம்

I. சாதாரண தேர்தல் முறையின் குறைகளை நீக்குவது

II. அனைத்து மக்களின் பிரதிநிதித்துவத்தை சட்டசபையில் நிலைநாட்டுவது

III. சிறுபான்மையோரின் பிரதிநிதித்துவம் ஏற்படுத்த

IV. சிறுபான்மையோரும், பெரும்பான்மையோரும் தம் எண்ணிக்கைக்கேற்ற விதப்படி தேர்ந்தனுப்பப் படத்தக்க வகையிலான முறை

கீழ்கண்ட குறியீடுகளை பயன்படுத்தி சரியான விடையை எழுது.

A) I மற்றும் II மட்டும்

B) I, II மற்றும் III மட்டும்

C) II, III மற்றும் IV மட்டும்

D) I, II, III மற்றும் IV

*(Group – II – HLT12 - 2012)*

**1272.** பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| a) | விதி 74 | 1. | கவுன்சில் ஆப் மந்திரிகள் |
| b) | விதி 356 | 2. | அரசியலமைப்பு திருத்த முறைகள் |
| c) | விதி 370 | 3. | ஜம்மு மற்றும் காஷ்மீர் |
| d) | விதி 368 | 4. | நெருக்கடி நிலை அறிவிப்பு |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| A) | 1 | 4 | 3 | 2 |
| B) | 2 | 1 | 4 | 3 |
| C) | 3 | 2 | 1 | 4 |
| D) | 4 | 1 | 3 | 2 |

*(Group – II – HLT12 - 2012)*

**1273.** கீழ்வருவனவற்றுள் எந்த கூற்று சரியானது ?

A) ஒரு நபர் ஒரு தொகுதிக்கு மேல் வாக்காளராக பதிவு செய்யலாம்

B) ஒரு நபர் ஒரு தொகுதியின் பல பகுதிகளில் வாக்காளராக பதிவு செய்யலாம்.

C) வாக்காளராக பதிவின் போது தவறான விபரம் கொடுத்தால் அபராத தொகையே தண்டனையாகும்.

D) வாக்காளராக பதிவின் போது தவறான விபரம் கொடுத்தால் அபராத தொகையும், ஓர் ஆண்டு சிறை தண்டனையும் விதிக்கப்படும்.

*(Group – II – HLT12 - 2012)*

**1274.** அரசியலமைப்பு விதி (Article) 3ன் கீழ் இந்திய பாராளுமன்றத்திற்கு இவற்றுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

I. ஒரு புது மாநிலம் அமைக்க

II. ஒருமாநிலத்தின் நிலபரப்பை அதிகரிக்க அல்லது குறைக்க

III. மாநிலங்களின் எல்லைகளை மாற்றி அமைக்க

IV. மாநிலங்களின் பெயரை மாற்றி அமைக்க

இவற்றில்,

A) I மற்றும் II சரியானவை

B) II, III மற்றும் IV சரியானவை

C) I, II மற்றும் III சரியானவை

D) I, II, III மற்றும் IV சரியானவை

*(Group – II – HLT12 - 2012)*

**1275.** கீழ்வருவனவற்றுள் பொதுப்பட்டியல் அதிகாரத்தில் வாரத அதிகாரம் எது ?

A) திருமணம் மற்றும் விவாகரத்து

B) நாளிதழ்

C) வெளியுறவுக் கொள்கை

D) முத்திரைதாள் கடவு

*(Group – II – HLT12 - 2012)*

**1276.** பின்வருவனவற்றுள் குடிமக்களுக்கு கிடைக்கப் பெறும் ஆனால் வெளிநாட்டவருக்கு கிடைக்கப் பெறாத உரிமை எது ?

A) சட்டத்திற்கு முன் சமம்

B) ஆரம்ப கல்விக்கான உரிமை

C) சமய நிகழ்வுகளை மேலாளும் சுதந்திரம்

D) கல்வி நிறுவனங்களை நிறுவி நிர்வகிக்கும் சிறுபான்மையினருக்கான உரிமை

*(Group – II – HLT12 - 2012)*

1270 ....A 1271.... A 1272..... A 1273..... D 1274 .... B 1275..... C 1276 ..... D

**1277.** பின்வரும் அம்சங்களில் இந்திய அரசியலமைப்பு நடைமுறைக்கு வருவதற்கு முன்பிருந்தே செயல்பாட்டிற்கு வந்தது எது?

A) அடிப்படை உரிமைகள்

B) குடியுரிமை

C) அரசு கொள்கையின் வழிகாட்டு நெறிகள்

D) அரசியலமைப்பு திருத்தங்கள்

*(Group – II – HLT12 - 2012)*

**1278.** அரசியல் அமைப்பு விதி 368ன் கீழ் கொண்டு வரதக்க பிரிவுகள் மற்றும் அரசியல் அமைப்பு விதிகளை சரியாக பொருத்தவும். பிறகு கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளை கொண்டு சரியான விடையை தேர்ந்தெடு.

| பிரிவு | அரசியல் அமைப்பு விதி |
|---|---|
| a) குடியரசுத் தலைவர் தேர்வு | 1. Art. 54 மற்றும் 55 |
| b) யூனியன் பிரதேசங்களுக்கு உயர்நீதி மன்றம் | 2. Art. 241 |
| c) மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கு நிர்வாக அதிகாரம் | 3. Art. 73 மற்றும் 162 |
| d) மத்திய மற்றும் மாநில அரசுகளிடையிலான சட்டத்துறை அதிகார பகிர்வு | 4. Art. 245-ல் இருந்து 255 வரை |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| A) | 1 | 2 | 3 | 4 |
| B) | 2 | 3 | 4 | 1 |
| C) | 4 | 3 | 2 | 1 |
| D) | 2 | 1 | 4 | 3 |

*(Group – II – HLT12 - 2012)*

**1279.** பின்வரும் பிரிவு வாக்காளர்களில் யார் தபால் மூலம் தங்கள் வாக்கினை அளிக்கலாம்?

I. ஆயுதம் தாங்கிய இராணுவத்தினர்

II. மாநில ஆயுதம் தாங்கிய காவல் படை

III. இந்தியாவிற்கு வெளியே பணிபுரியும் மத்திய அரசு ஊழியர்கள்

IV. மத்திய மற்றும் மாநில அமைச்சர்கள்

இவற்றுள்,

A) I, II மற்றும் III ஆகியவை சரி, ஆனால் IV தவறு

B) IV சரி மற்றும் I, II, III தவறாகும்

C) I மற்றும் II ஆகியவை சரி

D) III மற்றும் IV ஆகியவை சரி

*(Group – II – GGTM - 2012)*

**1280.** பின்வருவனவற்றுள் சரியாகப் பொருந்தியுள்ளது எது?

| அட்டவணை | பொருள் |
|---|---|
| A) நான்காவது அட்டவணை | - மத்திய மற்றும் மாநில அரசாங்கங்களுக் கிடையிலான அதிகார பங்கீடு |
| B) ஐந்தாவது அட்டவணை | - இராஜ்ய சபையில் மாநிலங்களுக்கு ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ள இடங்கள் |
| C) ஆறாவது அட்டவணை | - அஸ்ஸாம், மேகாலயா, திரிபுரா மற்றும் மிசோராம் ஆகிய மாநிலங்களில் பழங்குடியினர் பகுதிகளை நிர்வகித்தல் மற்றும் கட்டுப்படுத்துதல் |
| D) ஏழாவது அட்டவணை | - அரசியலமைப்பு அங்கீகரிக்கும் மொழிகள் |

*(Group – II – GGTM - 2012)*

**1281.** இந்திய அரசியலமைப்பு சாசனத்தை 'வடிவத்தில் கூட்டாட்சி ஆனால் மெய்ப்பொருளில் ஒன்றன் ஆட்சி', மற்றும் 'அரைகுறை கூட்டாட்சி' என்று விளக்கி உரைத்தவர் இவர்களில் யார்?

A) மோரிஸ் ஜோன்ஸ் B) கிரான்வில் ஆஸ்டின்

C) கே.ஸி. வேர் D) ஐவர் ஜெனிங்ஸ்

*(Group – II – GGTM - 2012)*

**1282.** கீழ்க்கண்ட வாக்கியங்களைக் கவனி :

கூற்று (A) : மனித உரிமைகள் உலகளாவியது.

காரணம் (R): மனித உரிமைகள் இயற்கை உரிமைகள் ஆகும்.

கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகள் மூலம் சரியான விடையைத் தேர்ந்தெடுக்க :

A) (A) மற்றும் (R) இரண்டும் சரி, மேலும் (R) என்பது (A) விற்கு சரியான விளக்கம்.

B) (A) மற்றும் (R) இரண்டும் சரி, மேலும் (R) என்பது (A) விற்கு சரியான விளக்கமல்ல.

C) (A) சரி, ஆனால் (R) தவறு.

D) (A) தவறு, ஆனால் (R) சரி.

*(Group – II – GGTM - 2012)*

---

1277 ....B 1278.... A 1279..... A 1280 ..... C 1281 .... C 1282 .....A

**1283.** குடியரசு தலைவரின் நீதி அதிகாரங்களும் செயல்பாடுகளும் :

I. மன்னிப்பு, தண்டனை நிறுத்தி வைத்தல், தண்டனை காலந்தாழ்த்தல்.

II. தண்டனையை குறைத்தல்.

III. தண்டனை விதிக்காமலிருக்க அல்லது குற்றவாளியின் தண்டனையை குறைத்தல்.

இவற்றுள்,

A) I மட்டும் B) II மற்றும் III

C) I, II மற்றும் III D) இவற்றுள் எதுவுமில்லை

*(Group – II – GGTM - 2012)*

**1284.** பிராந்திய தேர்தல் ஆணையர்களை பணிக்கு அமர்த்துவது

A) குடியரசுத் தலைவர், தேர்தல் ஆணையத்தின் ஆலோசனையின் படி

B) குடியரசுத் தலைவர், பிரதம மந்திரியின் ஆலோசனைப் படி

C) ஜனாதிபதி, உச்சநீதிமன்ற நீதிபதியின் ஆலோசனை படி

D) ஜனாதிபதி, துணை ஜனாதிபதியின் ஆலோசனைப் படி

*(Group – II – GGTM - 2012)*

**1285.** கீழ்க்கண்ட வாக்கியங்களில் எவை சரியானவை?

I. அரசியலமைப்பு திருத்த சட்ட மசோதா பாராளுமன்றத்தின் ஏதேனும் ஒரு அவையில் அறிமுகப்படுத்தப்படலாம்.

II. சட்டதிருத்த மசோதாவை இரு அவைகளும் தனித்தனியாக அமல்படுத்த வேண்டும்

III. கருத்து வேறுபாடு இருப்பின் இரு அவைகளும் கூடி அமர வழி உள்ளது.

இவற்றுள்,

A) I மற்றும் II மட்டும் B) II மற்றும் III மட்டும்

C) I மற்றும் III மட்டும் D) I, II மற்றும் III

*(Group – II – GGTM - 2012)*

**1286.** சட்டத்தின் முன் சமம் (விதி 14) யாருக்கு வழங்கப்படுகின்றது?

A) குடிமக்களுக்கு மட்டும்

B) வெளிநாட்டவருக்கு மட்டும்

C) குடிமக்களுக்கும், வெளிநாட்டவருக்கும்

D) இவை அனைத்தும் தவறு

*(Group – II – GGTM - 2012)*

**1287.** பட்டியல் Iஐ பட்டியல் II உடன் சரியாகப் பொருத்தி கீழ்க் குறிப்பிட்டுள்ள குறியீடுகளின் அடிப்படையில் சரியான விடையைத் தேர்வு செய்க:

| பட்டியல்-I (அரசியல் செயல்முறை தலைவர் நியமன முறை) | பட்டியல்-II (நாடு) |
|---|---|
| a) தலைமுறையாக தொடரும் முறை | 1. இந்தியா |
| b) நேரடி தேர்தல் முறை | 2. சுவிட்சர்லாந்து |
| c) மறைமுக தேர்தல் முறை | 3. அமெரிக்கா |
| d) சட்டசபை மூலம் தேர்தல் முறை | 4. இங்கிலாந்து |

குறியீடுகள்:

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A) | 1 | 2 | 3 | 4 |
| B) | 4 | 3 | 1 | 2 |
| C) | 2 | 4 | 1 | 3 |
| D) | 4 | 3 | 2 | 1 |

*(Group – II – GGTM - 2012)*

**1288.** அமைச்சரவைகுழு என்பது கீழ்காணும் நபர்களை கொண்டிருக்கும்

A) கேபினட் அமைச்சர்கள் மற்றும் மாநில அமைச்சர்கள்

B) துணை அமைச்சர்கள் மற்றும் மாநில அமைச்சர்கள்

C) (A) மற்றும் (B) சரியானவை

D) (A) மற்றும் (B) தவறானவை

*(Group – II – GGTM - 2012)*

**1289.** லோக்சபாவின் முதல் சபாநாயகர் யார்?

A) அனந்தசயனம் அய்யங்கார்

B) ஹூகம் சிங்

C) மாவலன்கார்

D) நீலம் சஞ்சிவரெட்டி

*(Group – II – GGTM - 2012)*

**1290.** பட்டியல் Iஐ பட்டியல் II உடன் சரியாகப் பொருத்தி கீழ்க் குறிப்பிட்டுள்ள குறியீடுகளின் அடிப்படையில் சரியான விடையைத் தேர்வு செய்க:

| பட்டியல்-I | பட்டியல்-II |
|---|---|
| a) 73 வது அரசியலமைப்புத் திருத்தம் | 1. பஞ்சாயத் ராஜ் |
| b) 74 வது அரசியலமைப்புத் திருத்தம் | 2. அடிப்படை உரிமைகள் |
| c) 42 வது அரசியலமைப்புத் திருத்தம் | 3. நகர்பாலிகா |
| d) 52 வது அரசியலமைப்புத் திருத்தம் | 4. கட்சி தாவல் தடைச் சட்டம் |

குறியீடுகள்:

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A) | 1 | 3 | 2 | 4 |
| B) | 2 | 4 | 1 | 3 |
| C) | 3 | 1 | 2 | 4 |
| D) | 4 | 2 | 3 | 1 |

*(Group – II – GGTM - 2012)*

1283 ....C 1284.... A 1285.....D 1286..... A 1287 .... B 1288..... C 1289..... C 1290...... A

**1291.** 1909 ம் ஆண்டு இந்திய கவுன்சில் சட்டமானது ஒரு வகையில் 1892ம் ஆண்டு இந்திய கவுன்சில் சட்டத்தின் வளர்ச்சியே இவ்வகையில்

A) மறைமுகத் தேர்தல் முறையில் தனி வகுப்பு வாக்காளர்களை அறிமுகப்படுத்தியது

B) செயற்குழுவில் இந்தியர்களை நியமித்தல் கூடாது என்பதற்கான நியதியினை உண்டாக்கியது

C) மத்திய சட்டமன்றத்தின் அதிகாரத்தில் பல கட்டுப்பாடுகளை அறிமுகப்படுத்தியது

D) மாநில அளவில் இரட்டையாட்சி அறிமுகப் படுத்தியது

*(Group – II – GGTM - 2012)*

**1292.** இந்தியாவின் குடியரசுத் தலைவர்களை வரிசைப் படுத்துக.

I. டாக்டர் ராதாகிருஷ்ணன்

II. டாக்டர் ஜாகிர் உசேன்

III. டாக்டர் ராஜேந்திர பிரசாத்

IV. வி.வி.கிரி

A) I, II, III, IV B) III, IV, I, II

C) III, I, II, IV D) III, II, I, IV

*(Group – III – (CSS-II) - 2012)*

**1293.** கீழ்க்கண்ட வாக்கியங்களை கவனி :

I. மக்களாட்சியினுடைய உண்மையான தத்துவம், அதன் ஆட்சி உரிமையை பகிர்ந்து கொள்வதில் தான் உள்ளது.

II. அது சமூக வகுப்புகளிடையே முரண்பாடுகள் ஏற்படாமல் இருக்க உதவுகிறது.

III. நிலைத்த அரசியல் தன்மையை உறுதிப்படுத்த நல்ல வழிகாட்டியாக இருக்கிறது.

கீழே குறிப்பிட்டுள்ள குறியீட்டில் சரியான விடையைத் தேர்ந்தெடு :

A) I மட்டும் சரி

B) I மற்றும் II இரண்டும் சரி

C) I, II மற்றும் III மூன்றும் சரி

D) I, II மற்றும் III மூன்றும் தவறு

*(Group – III – (CSS-II) - 2012)*

**1294.** பட்டியல் I-ஐ பட்டியல் II உடன் பொருத்தி, கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளைக் கொண்டு சரியான விடையைத் தேர்ந்தெடு.

| பட்டியல்-I | பட்டியல்-II |
|---|---|
| (a) அரசாங்கத்தின் பிரிவுகளுக்கு இடையே அதிகாரம் பகிர்ந்து அளிக்கப்பட்டுள்ளது | 1. சமூக அடிப்படையிலான அரசாங்கம் |
| (b) அதிகாரம் அரசாங்களுக்கு இடையே பலநிலைகளில் பகிர்ந்து அளிக்கப் பட்டுள்ளது. | 2. அதிகார கூட்டுக்கலைவு |
| (c) அதிகாரம் பல்வேறு சமூக பிரிவுகளுக்கு பகிர்ந்து அளிக்கப் பட்டுள்ளது. | 3. கூட்டாட்சி அரசாங்கம் |
| (d) அதிகாரம் இரண்டு மற்றும் அதற்கு மேற்பட்ட அரசியல் கட்சிகளிடம் பகிர்ந்து அளிக்கப்பட்டுள்ளது. | 4. கூட்டரசு அமைப்பு முறை அரசாங்கம் |

குறியீடுகள்:

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| A) | 4 | 1 | 2 | 3 |
| B) | 2 | 3 | 4 | 1 |
| C) | 2 | 4 | 1 | 3 |
| D) | 3 | 4 | 1 | 2 |

*(Group – III – (CSS-II) - 2012)*

**1295.** இந்திய அரசியலமைப்பின் எட்டாவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள இந்திய மொழிகளின் எண்ணிக்கை யாவை?

A) 114 B) 22 C) 46 D) 48

*(Group – III – (CSS-II) - 2012)*

**1296.** கீழ்க்கண்டவற்றில் எது சரியாக பொருந்துகிறது?

A) வாக்களிக்க தகுதி - 16 வயது

B) நேரடித் தேர்தல் - குடிமக்களின் பிரதி நிதிகளைக் கொண்டு உறுப்பினர்களை தேர்ந் தெடுக்கும் முறை

C) மறைமுகத் தேர்தல் - குடிமக்கள் நேரடியாக தங்கள் பிரதிநிதிகளை தேர்ந்தெடுப்பது

D) தேர்தலில் போட்டியிடத்- தகுதி 25 வயது நிரம்பியவர்கள்

*(Group – III – (CSS-II) - 2012)*

**1297.** பாலின அசமன்பாட்டுக் குறியீட்டெண்ணுடன் தொடர்பு இல்லாதது எது?

A) செழுமை நலம் B) உரிமை பெறுதல்

C) கல்வி பெறுதல் D) நிதி பெறும் வாய்ப்பு

*(Group – III – (CSS-II) - 2012)*

1291 ....A 1292.... C 1293..... C 1294..... C 1295 .... B 1296.... D 1297..... D

**1298.** பட்டியல் I ஐ பட்டியல் II உடன் பொருத்தி, கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளைக் கொண்டு சரியான விடையைத் தேர்ந்தெடு.

| பட்டியல்-I | பட்டியல்-II |
|---|---|
| (a) மத்திய அரசு | 1. பிரதமர் |
| (b) மாநிலம் | 2. ஊராட்சி தலைவர் |
| (c) மாநகராட்சி | 3. ஆளுநர் |
| (d) கிராம பஞ்சாயத்து | 4. மேயர் |

குறியீடுகள்:

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| A) | 4 | 1 | 2 | 3 |
| B) | 2 | 3 | 4 | 1 |
| C) | 1 | 3 | 4 | 2 |
| D) | 3 | 4 | 1 | 2 |

*(Group – III – (CSS-II) - 2012)*

**1299.** அரசியலமைப்பு குடியரசுத் தலைவருக்கு வழங்கியுள்ள மன்னிப்பளிக்கும் அதிகாரமானது

A) சட்டமியற்றும் அதிகாரம் B) செயல்துறை அதிகாரம்
C) நீதித்துறை அதிகாரம் D) அவசரகால அதிகாரம்

*(Group – III – (CSS-II) - 2012)*

**1300.** கால வரிசைப்படி எழுதுக:

I. Dr. A.P.J. அப்துல்கலாம்
II. Dr. சங்கர்தயால் சர்மா
III. K.R. நாராயணன்
IV. P. வெங்கடராமன்

இவற்றுள் :

A) IV, II, III மற்றும் I B) III, I, II மற்றும் IV
C) I, III, IV மற்றும் II D) II, IV, I மற்றும் III

*(Group – IV – SGSY - 2012)*

**1301.** கீழ்க்கண்டவைகளில் எவை பிரதமரின் அலுவலகத்திலிருந்து நேரடியாக கையாளப்படுகிறது?

I. பிரதமரின் தேசிய நிவாரண நிதி
II. தேசிய பாதுகாப்பு நிதி

இவற்றுள் :

A) I மட்டும் B) II மட்டும்
C) I மற்றும் II D) I ம் இல்லை II ம் இல்லை

*(Group – IV – SGSY - 2012)*

**1302.** பட்டியல் Iஐ பட்டியல் II உடன் பொருத்தி, கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளைக் கொண்டு சரியான விடையைத் தேர்ந்தெடு :

| பட்டியல்-I | பட்டியல்-II |
|---|---|
| a) முதல் ஐந்தாண்டு திட்டம் | 1. தன்னிறைவு பெறுதல் |
| b) இரண்டாம் ஐந்தாண்டு திட்டம் | 2. வேளாண்மை மற்றும் தொழில் வளர்ச்சி |
| c) மூன்றாம் ஐந்தாண்டு திட்டம் | 3. வேளாண்மை வளர்ச்சி |
| d) நான்காம் ஐந்தாண்டு திட்டம் | 4. கனரகத் தொழில் வளர்ச்சி |

குறியீடுகள்:

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A) | 2 | 4 | 1 | 3 |
| B) | 1 | 2 | 3 | 4 |
| C) | 3 | 4 | 2 | 1 |
| D) | 3 | 4 | 1 | 2 |

*(Group – IV – SGSY - 2012)*

**1303.** கீழ்க்கண்டவற்றில் எது சரியாக பொருந்துகிறது?

A) ஐந்தாவது ஐந்தாண்டு திட்டம் - வேலை வாய்ப்பை உருவாக்குதல்
B) ஏழாவது ஐந்தாண்டு திட்டம் - வறுமை ஒழிப்பு மற்றும் சுயசார்பு
C) எட்டாவது ஐந்தாண்டு திட்டம் - 2000 ல் முழு வேலை வாய்ப்பை சாதிக்கும் வேலையை உருவாக்குதல்
D) பத்தாவது ஐந்தாண்டு திட்டம் - சமூக நீதியுடன் வளர்ச்சி மற்றும் சமத்துவம்

*(Group – IV – SGSY - 2012)*

**1304.** நிதிக்குழுவின் தலைவரை நியமனம் செய்வது

A) குடியரசுத் தலைவர் B) பிரதம அமைச்சர்
C) மக்களவை சபாநாயகர் D) நிதி அமைச்சர்

*(Group – IV – SGSY - 2012)*

**1305.** கீழ்க்கண்ட பிரதம அமைச்சர்களை கால வரிசைப் படுத்துக :

I. திரு. சரண்சிங்
II. திரு. வி.பி.சிங்
III. திரு. லால்பகதூர் சாஸ்திரி
IV. திரு. சந்திரசேகர்

இவற்றுள் :

A) III, I, II & IV B) IV, II, III & I
C) II, III, IV, & I D) IV, III, I & II

*(Group – IV – SGSY - 2012)*

**1306.** பின்வருவனவற்றுள் இந்திய துணை குடியரசுத் தலைவராக தேர்ந்தெடுக்கப்படுவதற்கு அவசியமான தகுதி அல்லாதது எது?

A) அவர் இந்திய குடிமகனாக இருக்க வேண்டும்
B) அவருக்கு இந்தி பேசவும், படிக்கவும், எழுதவும் தெரிந்திருக்க வேண்டும்
C) அவர் 35 வயது நிரம்பியவராக இருக்க வேண்டும்
D) அவர், மாநிலங்களவையில் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட தகுதி பெற்றவராக இருக்க வேண்டும்

*(Group – IV – SGSY - 2012)*

1298 ....C 1299.... C 1300..... A 1301 ..... C 1302 .... D 1303..... C 1304 ..... A 1305...... A 1306 .....B